# திருமலைத்தீபம்
## Thirumalaitheepam

தீபம் – 87 ஆனி – 2024 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=




## திருத்தந்தையின் செய்தி

### நமது செயற்பாடுகளுக்கு வலிமை அளிப்பது இறை உறவே!

இறைவனுடன் நமது உறவை வளர்ப்பது நாம் மேற்கொள்ள விரும்பும் திட்டங்களை ஆதரிக்கும் திறன் கொண்ட வலுவான வேர்களைப் பெற உதவுகின்றது என்றும், நாம் மேற்கொள்ள விரும்பும் திட்டங்கள் அனைத்திற்கும் வலிமை அளிப்பது இறைவனுடனான ஆழமான இறைநம்பிக்கை மட்டுமே எனவும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும் அமைதியை ஏற்படுத்துபவர்களுக்காக இறைவேண்டல் செய்வோம். அமைதியை விரும்புவது கோழைத்தனம் அல்ல, மாறாக அதற்கு எதையாவது விட்டுக்கொடுக்கும் அதீத வலிமையும் துணிவும் தேவைப்படுகின்றன.

நம் உலகில் அமைதியை ஏற்படுத்துவோர் மோதலின் இடைவிடாத மற்றும் பிடிவாதமான தர்க்கத்தை எதிர்க்கட்டும் மற்றும் சந்திப்பு

➡ 2

## இரத்தினபுரி மறைமாவட்டத்தின் புதிய ஆயர்

### பேரருட்திரு பீற்றர் அன்ரன் வைமன் குரூஸ் அவர்கள்



பேரருட்திரு பீற்றர் அன்ரன் வைமன் குரூஸ் அவர்களின் ஆயர் அபிஷேக திருநிலைப்படுத்தலும், இரத்தினபுரி மறைமாவட்ட ஆயராக பொறுப்பேற்கும் நிகழ்வும் 2024 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1 ஆம் திகதி அவிசாவளையில் அமைந்துள்ள ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## செபிப்போம்! வாழ்த்துவோம்!



அதிவணக்கத்திற்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் 41 ஆவது ஆயர்த்துவ நினைவு நாள்

07.05.2024



அதிவணக்கத்திற்குரிய ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்களின் 38 ஆவது குருத்துவ நினைவு நாள்

21.05.2024

## தவக்காலம் பிறரின் தேவையில் பங்களிக்கும் காலம்



தவக்காலத்தை முன்னிட்டு புனித மரியாள் பேராலய கிறிஸ்தவ வாழ்வு சமூக (CLC) அங்கத்தவர்களினதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களினதும் தவக்கால ஒறுத்தல் முயற்சியாக எமது பங்கிலும், அயலில் உள்ள ஏனைய இடங்களில் இருப்பவர்களின் விசேட விதமாக அன்றாட உணவுத் தேவைக்காக அல்லலுறும் மக்களின் உணவுத்தேவையை குறிப்பிட்ட காலத்திற்கு ஈடு செய்யும் நோக்குடன் தவக்கால அன்பளிப்பாக உலர் உணவுப் பொதிகள் (அடிப்படை உணவுப் பொருட்கள் உள்ளடக்கியதாக) தயார் செய்யப்பட்டு எமது புனித மரியாள் பேராலயத்தில் மறைமாவட்ட ஆயர் தலைமையில் நடைபெற்ற குருத்தோலை ஞாயிறு திருப்பலியின் பின் (24.03.2024) ஆயர் தலைமையில் பங்குத்தந்தையின் வழிகாட்டலில் கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தினரால் தேவையுடையோருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மொத்தமாக 40 குடும்பங்கள் தவக்கால அன்பளிப்பின் ஊடாக உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

தகவல்: கிறிஸ்தவ வாழ்வு சமூகம்
புனித மரியாள் பேராலயம், திருகோணமலை

## Caritas Food City, Caritas Food Corner, Caritas Guest Villa திறப்பு விழா நிகழ்வு









திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் இன்னுமொரு மைல் கல்லாக வறிய மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் மேம்பாட்டுத் திட்டமானது (Sustainable Project Complex)...

தொடர்ச்சி 02

# திருகோணமலை மறைமாவட்ட ஆலயத் திருவிழாக்கள் சில






இறை இரக்கத் திருத்தலம் அலஸ்தோட்டம் புனித சூசையப்பர் ஆலயம் நிலாவெளி லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று

*01 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

(எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் திறப்பு விழா)



மறைமாவட்டத்தின்

- உள்ளூர் தொழில்முனைவோரை (Entrepreneurs) ஊக்குவித்தல்.
- உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துதலும், தரநிலைப்படுத்தலும்.
- பயனாளிகளுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளை மேம்படுத்துதல்.
- Silence Saving Strategy (SSS) முறையை அறிமுகப்படுத்தல்.
- தேவையிலுள்ளவர்களுக்கான சிறப்பு தள்ளுபடி / சலுகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.
- அனைத்து சமூகங்களினதும் தரமான வாழ்க்கையை மேம்படுத்தல்.



ஆகிய தூர நோக்கு சிந்தனைகளுடன் அமைக்கப்பட்ட Caritas Food City, Caritas Food Corner, Caritas Guest Villa ஆனது கடந்த 22.05.2024ம் திகதியன்று திருகோணமலை மறைமாவட்டத்தின் மதிப்பிற்குரிய ஆயர் பேரருட்திரு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையிலும், கரித்தாஸ் ஸ்ரீலங்கா - செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குனர் அருட்பணி லூக் நெல்சன் அடிகளார், எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும், மறைமாவட்ட குருமுதல்வரும் அருட்பணி. Dr.B. போல் றொபின்சன் ஆகியோரின் பங்குபற்றுதலுடனும் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது ஆயர் அவர்களினால் இறையாசீர் வழங்கப்பட்டதுடன், முதலாவது பொருட்கொள்வனவும் செய்யப்பட்டது. மேலும், மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 22 பணியாளர்கள் தங்களது உறுதிமொழியையும் எடுத்துக் கொண்டார்கள்.

இதில், ஏனைய கரித்தாஸ் நிறுவனங்களின் பணிப்பாளர்கள், திருகோணமலையில் பணியாற்றும் குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர்கள், Grace Construction உரிமையாளர், ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் எகெட் கரித்தாஸ் நிறுவன பணியாளர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

“YOUR PURCHASE FEEDS A POOR” “உங்களின் ஒவ்வொரு கொள்வனவும் ஓர் ஏழையை வாழ்விக்கின்றது” இத்திட்டமானது ஆசிய கண்டத்திலே முதலாவது திட்டமாக பேசப்படுகின்றது.

வாடிக்கையாளர்களே உங்களுக்கு எமது நன்றிகள்!
உங்களது ஆசீரையும் வேண்டுகின்றோம்!

**திருத்தந்தையின் செய்தி தொடர்ச்சி...**

உரையாடலில் அமைதிக்கான பாதைகளைத் திறக்கட்டும் என்றும், அவர்கள் தங்கள் நோக்கங்களில் அயராது விடாமுயற்சியுடன் இருக்கட்டும். அவர்களின் முயற்சிகள் வெற்றியுடன் முடிசூட்டப்படட்டும் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மக்கள் அமைதி, உறுதித்தன்மை, பாதுகாப்பு, வளமை ஆகியவற்றின் நிலைமைகளை விரும்புகிறார்கள் என்றும் அதில் ஒவ்வொருவரும் அமைதியாகத் தங்கள் கடமை மற்றும் வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும் எனவும், கருத்தியல், தேசியவாத மற்றும் பொருளாதார நோக்கங்களுக்காக இந்த உன்னத ஒழுங்கை அழிப்பது மனிதர்களின் முன் மற்றும் வரலாற்றின் முன் பெரும் தவறு என்றும், கடவுள் முன் பாவம் என்றும் எடுத்துக்காட்டியுள்ளார்.

போர்களை விரும்புபவர்களுக்காகவும், அவற்றைத் தொடங்குபவர்களுக்காகவும் தேவையில்லாமல் அவற்றைத் தூண்டி விடுபவர்களுக்காகவும், அதனை தக்கவைக்கவும், நீடிக்கவும் அல்லது அவர்களிடமிருந்து இலாபம் பெறுபவர்களுக்காகவும் இறைவேண்டல் செய்வோம் என்றும், கடவுள் அவர்களின் இதயங்களை ஒளிரச் செய்வாராக, தீமைகளை விளைவிக்கத் தூண்டும் செயல்களை அவர்களுக்கு வெளிப்படுத்துவாராக என்றும் உரைத்துள்ளார்.

கடந்த கால மற்றும் நிகழ்கால போர்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக செபிப்போம் என்றும், அந்தப் பயங்கரமான மோதல்களில் இறந்த அனைவரையும் கடவுள் தன்பாதம் ஏற்றுக்கொள்வாராக என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை இன்றும் போர்களால் துன்பப்படும் அனைவருக்கும் அவர் உதவட்டும் என்றும், ஏழைகள் மற்றும் பலவீனமானவர்கள், முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் எப்போதும் இந்த அவலங்களில் முதலில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தனது கவலையை பதிவு செய்துள்ளார்.

நாம் உண்மையில் இறைவனை அன்பு செய்கிறோம் என்றால்; நாம் மனித குலத்தின் மீது அதாவது ஒவ்வொரு மனிதர்மீதும் பாசம் கலந்த உணர்ச்சியுடையவர்களாகச் செயற்பட வேண்டும். துன்புறுவோர், கைவிடப்பட்டோர், மற்றவர்களால் ஏற்றுகொள்ளப்படாதோர் என அனைவரிலும் இயேசுவின் திருஇதயம் தன் வெளிப்பாட்டை கொண்டிருப்பதால் குறிப்பாக இம்மக்களை பாச உணர்வுடன் நெருங்கி அணைப்பது, கடவுளை உண்மையில் அன்புகூர்வதன் வெளிப்பாடாகும் என திருத்தந்தை அவர்கள் தனது உரையில் கூறியுள்ளார்.

வத்திக்கான் செய்தி

**இறை இரக்கத் திருத்தலத்தில் சித்திரை 14 ஆம் திகதி தேசிய அன்பிய தினம் சிறப்பிக்கப்பட்டது.**




# இறைநம்பிக்கையின் அடிப்படையில்

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

அன்பு நிறைந்த சகோதரமே, இன்றைய உலகில் பல்வேறு துன்பங்களால் மக்கள் அலைக்கழிக்கப்பட்டு துன்பப் படுகிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்தத் துன்பங்களுக்கு என்ன காரணம் என்பது யாரும் அறியாத ஒரு புதிராகவே இருக்கின்றது. மகிழ்ச்சியாக வாழ வழி ஒன்று உண்டு என்று யாராவது கண்டால் அவர்களை நாம் ஞானிகள் என்றழைக்கின்றோம். மிகப் பெரிய ஞானிகள் என்று நாம் அழைக்கும் ஞானிகளுள் பலர் காட்டிய வழியில் வாழ்ந்தால் நாமும் மகிழ்ச்சியாக வாழலாம் என்று அவர்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றோம்.

இந்தக் கட்டுரையில், இவ்வாறு ஞானிகளைப் பின்பற்றினால் மகிழ்ச்சியாக வாழ முடியுமா, உண்மையான ஞானத்தை எப்படிப் பெற்றுக் கொள்ளலாம், என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

ஒரு மிகவும் புகழ் பெற்ற வாகன ஓட்டுநர் வாகனம் ஓட்டும் முறையை விளக்கி காணொளி ஒன்றைப் பதிவிடுகிறார். அந்தப் பதிவில் ஒரு வாகனத்தை ஓட்டிச் செல்கிறார். ஒரு திருப்பத்தில் திரும்பும் போது சற்று வலப்புறம் அதிகமாக திரும்பி அதன் பின் வாகனத்தை நேராகத் திருப்புகிறார். காரணம், எதிரே வேகமாக வந்த இன்னொரு வாகனத்திற்கு வழிவிடுவதற்காக வலது புறம் விலகிச் செல்கிறார். இந்தக் காணொளியைப் பார்த்து விட்டு ஒரு நண்பர் தானும் அது போன்ற ஒரு திருப்பத்தில் திரும்பும் போது அந்த புகழ் பெற்ற ஓட்டுநர் திருப்பியதைப் போன்று வலப்புறம் அதிகமாகத் திருப்புகின்றார், ஆனால் அந்த நேரத்தில் இன்னொரு வாகனத்தில் இவரது வாகனம் மோதி விபத்திற்குள்ளாகிவிடுகின்றது. காரணம், வலப்புறத்தில் ஒரு வாகனம் மிகவும் மெதுவாக சென்று கொண்டிருக்கின்றது, இதைக் கவனிக்காமல் தனக்கு சொல்லிக் கொடுத்தவாறு திரும்பியதன் விளைவு, தனக்கு அருகே நின்ற வாகனத்தை அவரால் காண முடியவில்லை.

அன்பார்ந்தவர்களே, இது நமக்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கும் என நினைக்கின்றேன். இந்த உவமையில், புகழ் பெற்ற ஓட்டுநர் காட்டிய காணொளியில் உள்ள சூழ்நிலை வேறு, உண்மையில் உள்ள சூழ்நிலை வேறு. வெவ்வெறு சூழ்நிலைகளுக்கு ஒரே விதமான முடிவு நிச்சயமாக விபரீதமாகவே முடியும் என்பதற்கு இது ஒரு சான்று.

நமது ஆன்மீக வாழ்விலும் கூட, பிறர் நமக்குக் காட்டிய பாதையில் அப்படியே நடக்க வேண்டும் என்றால் அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தை நம்மால் நிச்சயமாக பெற்றுக் கொள்ள இயலாது, மாறாக நம்முடைய சூழ்நிலைகளுக்கேற்ப விழிப்புணர்வுடன் இறைவனைத் தேடினால் நிச்சயமாக இறை அனுபத்தை நம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு மனிதன் தன் வாழ்வில் இழந்த ஒரு வினாடியை மீண்டும் பெற்றுக் கொள்ளவே முடியாது. இழந்த வினாடி என்று சொல்லும் போது, தான் ஏற்கனவே வாழ்ந்த ஒரு வினாடியை அதே போல் இன்னொரு முறை வாழவே முடியாது. காரணம், நம் வாழ்க்கை மிகவும் உயிரோட்டமுள்ளது. எனவே ஒவ்வொரு வினாடியும் புதிது புதிதாகப் பிறக்கின்றதே தவிர, ஏற்கனவே நாம் வாழ்ந்த வினாடி திரும்ப வரவே வராது. நம் வாழ்க்கையில் உள்ள வினாடியே திரும்ப வராது என்றால், பிறர் வாழ்வில் வாழ்ந்த வினாடி நம் வாழ்வில் வருவது நிச்சயமாக சாத்தியமற்ற ஒன்றே என்றால் அது மிகையாகாது.

எனவே நம் வாழ்வை புதிதாகப் பார்க்க வேண்டும். பிறர் வாழ்ந்த பழைய வாழ்வாக அல்ல, நாம் மட்டும் வாழவேண்டிய புதிய வாழ்வாகப் பார்க்க வேண்டும். எனவே இந்த புதிய வாழ்வில் நமக்குத் தெரிவதைப் போன்று வேறு எந்தப் பெரிய ஞானிக்கும் தெரிய வாய்ப்பில்லை. நாம் தான் நம் வாழ்க்கைக்கு சரியான வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்.

நமது ஆன்மீக வழிகாட்டிகளாக பலர் நம் முன் இருக்கின்றனர். குறிப்பாக நம் ஆண்டவர் இயேசு, அன்னை மரியாள், அவர்களது வரிசையில் பல புனிதர்கள்... இவர்கள் தங்கள் வாழ்வை தங்கள் விழிப்புணர்வில் மிகவும் சரியாக வாழ்ந்து சென்றவர்கள். இவர்கள் தங்கள் வாழ்க்கைக்காக இன்னொருவர் காட்டிய வழியில் செல்லவில்லை, மாறாக இறைவார்த்தையைப் படித்து அதன் ஒளியில் தங்களுக்கென்று புதிய வாழ்க்கை ஒன்றை உருவாக்கிக் கொண்டார்கள்.

இன்று கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றோம், என்றால், கிறிஸ்து என்னுடைய சூழ்நிலையில் இருந்தால் எப்படி சிந்தித்திருப்பார் என்று வாழ அழைக்கப் படுகின்றோம். மாறாக கிறிஸ்து 2000 ஆண்டுகளுக்கு முன் எப்படி வாழ்ந்தார் என்று பார்த்து அதைப் போல வாழ்வதற்கு அல்ல.

அவர் நமக்கு கொடுத்த விவிலியம் கூட, நமக்கு ஒரு கைகாட்டிப் பலகையைப் போன்று சரியான வழியை அடைய நீங்கள் இந்த வழியாகப் பயணிக்க வேண்டும் என்ற பாதையைக் காட்டுகிறதேயன்றி, நமக்கு ஒரு பாதையை அதுவே உருவாக்குவதில்லை. அதாவது நாம் வாழ்வதற்கு வழிமுறைகளைக் காட்டுகிறதேயன்றி அவையே வாழ்வாகிவிடுவதில்லை. உதாரணமாக, “ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்” என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் (யோவான் 13:32) என்ற இந்த வாசகத்தை நாம் மனப்பாடம் செய்வதால் அவரது கட்டளையைக் கடைப்பிடிப்பவர்கள் ஆகிட முடியாது. மாறாக, அந்த வார்த்தையை நம் வாழ்வில் கடைப்பிடித்து நம்மோடு உள்ளவர்களை அன்பு செய்ய வேண்டும். அவ்வாறு அன்பு செய்யும் போது, நாம் பெறுகின்ற அனுபவம், அந்த வார்த்தையை உண்மையாக்கும், வாழ்வாக்கும். வெறுமனே, வார்த்தைகளை படிப்பதோ, மனப்பாடம் செய்வதோ நமக்கு அனுபவத்தை தர முடியாது. இதையே “உயிர் இல்லாத உடல் போல, செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே” (யாக் 2:26) என்று திருத்தூதர் யாக்கோபு கூறுகிறார்.

செயற்பாடுகளே நமக்கு அனுபவங்களைத் தர முடியும். அனுவங்களே நமக்கு சரியான ஞானத்தைத் தர முடியும். நமது இறைநம்பிக்கை உண்மையானதாகவும் செயற்பாடுள்ளதாகவும் இருக்க வேண்டுமென்றால் அந்த இறைநம்பிக்கை நமது அனுபவத்திலிருந்து வந்திருக்க வேண்டும். நமது இறைநம்பிக்கை என்பது எப்போதுமே இறைவன் மீது நாம் கொண்டுள்ள எதிர்பார்ப்பாகவே இருக்கின்றது. இறைவன் நமக்கு நம்பிக்கையுள்ளவராக இருக்க வேண்டும், நாம் ஜெபத்தில் கேட்பதை நமக்கு மறுக்கக் கூடாது, நாம் நினைக்கும் செயல்கள் மட்டும் சரியாக நடந்துவிட வேண்டும் என்று பலவாறு இறைவனிடம் எதிர்பார்க்கின்றோம்.

இன்னுமா தயக்கம்




இந்த எதிர்பார்ப்புகளுக்கு இணங்க, இறைவன் வாக்குமாறாதவர், மிகவும் நல்லவர் என்று அவரைச் சொல்கின்றோம். இந்த வாக்கு மாறாதவர், நல்லவர் என்பதற்கு நாம் கொடுக்கும் அர்த்தம், அவர் நாம் கேட்பதைத் தர வேண்டும், அவர் நமக்கு தேவையானதை நிறைவேற்ற வேண்டும் என்பதேயாகும். இது முற்றிலும் சுயநலமுள்ள முடிவாகும்.

ஆனால் உண்மையான விதத்தில் நாம் கேட்பவை அனைத்தும் நியாயமானவை தானா என்று ஒரு நிமிடம் கூட நாம் சிந்திக்க மாட்டோம். ஆனால், கேட்டவை கிடைக்கவில்லை என்றால், நமது நம்பிக்கை பொய்த்துவிட்டது என்று புலம்புகிறோம். இறைவனையே குறை சொல்ல ஆரம்பித்து விடுகின்றோம். இது சரியான இறைநம்பிக்கை அல்ல. சரியான இறைநம்பிக்கையில், இறைவன் நமக்கு நன்மையை மட்டும் செய்பவராக அல்ல, சில சமயங்களில் நம்மைத் திருத்துபவராகவும் நமக்கு படிப்பினைகளைத் தருபவராகவும் கூட இருக்கின்றார். ஆனால், நாம் விரும்புபவற்றை மட்டும் பெற்றுக் கொண்டு விரும்பாதவற்றை இறைவனின் பிரமாணிக்கமின்மை என்று சொல்லும் நம்மை எப்படி நம்பிக்கையாளர் என்று சொல்ல முடியும்? ஆண்டவர் இயேசு கெத்சமனி தோட்டத்தில், “தந்தையே என் விருப்பமன்று, உம் விருப்பமே நிறைவேறட்டும்!” என்று மன்றாடினார். அந்த சூழ்நிலையை நாம் சிந்தித்தால், அந்த நிலையில் கூட நம்மால், “உம் சித்தம் நிறைவேறட்டும்!” என்று சொல்ல முடியுமா என்று தோன்றும். அது தான் உண்மையான இறைநம்பிக்கை. அந்த நம்பிக்கையை நாம் நமது அனுபவத்தின் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

உண்மையான இறைநம்பிக்கையை நாமும் பெற்றுக் கொள்ள இறைவனின் துணையில் முயற்சி செய்வோம்.

# அன்னை மரியாளின் வணக்க மாதம்

ஏன் மே மாதம் ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மரியாவுக்கு அர்ப்பணிக்கப்படுள்ளது? கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு மே மாதம் மகிவும் புகழ்பெற்ற வணக்க மாதம் அதாவது தூய கன்னி மரியாளின் நினைவாக சிறப்பு பக்தி முயற்சிகள் செய்யப்படும் ஆண்டின் சிறப்புமிக்கதொரு மாதம் ஆகும். அது ஏன்? எப்படி மே மாதம் கன்னி மரியாளுக்கான சிறப்பு மிக்கதொரு மாதமாக மாறியது? என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன.

பண்டைய கிரேக்க மற்றும் உரோமை கலாசாரத்தில் மே மாதமானது கருவுறுதல் மற்றும் வசந்த காலத்துடன் இணைக்கப்பட்ட ரோமானிய தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக இருந்தது மேற்கத்திய கலாச்சாரத்தில் மே மாதத்தை புது வாழ்வு மற்றும் தாய்மையோடு இணைத்துப் பார்க்கும் வழக்கம் தோன்றியது. எனவே தான் “அன்னையர் தினத்தை” மே மாதத்தில் நாம் கொண்டாடுகின்றோம். அதேவேளையில் பெண்களுக்குள் பேறு பெற்றவளும் இறைவனின் தாயுமான அன்னை மரியாளுக்கு இந்த மே மாதத்தை அர்ப்பணித்துச் சிறப்பிக்கவும் கிறிஸ்தவர்கள் விரும்பினார்கள். திருஅவையில் ஆரம்பகாலத்தில் ஒவ்வோர் ஆண்டும் மே 15 ஆம் திகதி அன்று கன்னி மரியாவுக்கு பெரியதொரு விழா கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

மே மாத மரியன்னை பக்தி அதன் தற்போதைய வடிவத்தில் உரோமை நகரில் தோன்றிது. அதாவது உரோமில் இருந்த இயேசு சபையைச் சேர்ந்த தந்தை லடோமியா மாணவர்களிடையே துரோகத்தையும் ஒழுக்கக்கேட்டையும் கண்டு அதற்குப் பரிகாரமாக 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மே மாதத்தை மரியாளுக்கு அர்ப்பணித்துச் செபித்திட ஒரு சபதம் செய்தார். உரோமை நகரில் இருந்து வந்த இந்த நடைமுறை மற்ற நாடுகளில் இருந்த இயேசு சபைக் கல்லூரிகளுக்கும் பரவியது. பின்னர் இந்நடைமுறையானது கத்தோலிக்க திருஅவை எங்கும் பரவியது எனலாம்.

மேலும் அன்னை மரியாவுக்கு மே மாதத்தில் சிறப்பு வணக்கம் செலுத்த 1815 இல் திருத்தந்தை 7 வது பத்திநாதர் அனுமதி அளித்தார். அவரைத் தொடர்ந்து 1945 ஆம் ஆண்டில் திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் மே 31 ஆம் திகதி அன்னை மரியாள் என்றும் அரசி என்னும் விழாவை நிறுவி மே மாதத்தை மரியாளின் மாதமாக உறுதிப்படுத்தினார்.

இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் பிறகு இந்த விழாவானது ஆகஸ்ட் 22க்கு மாற்றப்பட்டது. அதே நேரத்தில் மே 31 ஆம் திகதி மரியாள் எலிசபெத்தம்மாளைச் சந்திக்கும் விழாவாக மாறியது. இத்தகைய மாண்பும் மகத்துவமும் மிக்க மரியாளுக்கான மே மாதக் கொண்டாட்டமானது பாரம்பரியம் நிறைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

**மரியன்னை பக்தி வரையறை மற்றும் அதன் தனிச் சிறப்புக்கள்**

மரியன்னை பக்தி பற்றி இன்றும் பல விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. எனவே இதைப் பற்றிய கத்தோலிக்கத் திருஅவையின் படிப்பினையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மரியன்னை பக்தியானது இறைவனை



வழிபடுவதிலிருந்து வேறுபடுகின்றது. மரியாவுக்கான விசுவாசிகளுடைய வணக்கமானது மற்ற புனிதர்களிடம் அவர்கள் கொண்ட பக்தியைவிட உயர்ந்தது என்றாலும் கடவுளுக்கு ஒதுக்கப்பட்ட ஆராதனையைவிட இது தாழ்ந்ததாகும். அதே நேரத்தில் மரியாள் பக்திக்கும் கடவுளுக்கு வழங்கப்படும் வழிபாட்டிற்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பும் உள்ளது. உண்மையில் மரியன்னை பக்தியானது மூவொரு இறைவனுக்கான ஆராதனைக்கு வழிவகுக்கிறது என்று திருத்தந்தை இரண்டாவது யோவான் பவுல் அவர்கள் தனது மரியியல் சிந்தனையில் கூறுகின்றார்.

மரியன்னை பக்தியானது திருஅவையின் தாய் மற்றும் மனிதகுலத்தின் தாயான அவளைப் பிள்ளைக்குரியதொரு அன்போடு கிறிஸ்தவ மக்கள் தங்கள் தாயாக நினைத்து அவளுடைய பரிந்துரையை வேண்டுவதற்கும் விண்ணக மகிழ்வினுடைய நம்பிக்கையில் இப்பூவுலக வாழ்விற்குத் தேவையான செல்வங்களைப் பெறுவதற்கும் நம்பிக்கையினால் அவர்களை ஊக்குவிக்கின்றது.

எனவே இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கமானது புனித கன்னி மரியாள் மீதான பக்தி பற்றிக் கூறுகையில் திருஅவையில் என்றும் இருந்துள்ள இவ்வணக்கம் உண்மையிலேயே தனிப்பட்டது மனிதரான வாக்குக்கும் தந்தைக்கும் தூய ஆவியார்க்கும் நாம் அளிக்கும் ஆராதனையிலிருந்து உள்ளியல்பிலேயே இது வேறுபட்டது என்றுகூறி திருஅவையின் பிள்ளைகள் அனைவரும் இத்தூய கன்னியின் வணக்கத்தை சிறப்பாய்ப் பொதுவழிபாட்டு வணக்கத்தைப் பெருமனத்துடன் போற்றி பேணிவளர்க்க வேண்டும். பல நூற்றாண்டுகளாய்த் திருஅவையின் ஆசிரியம் போற்றிவரும் மரியன்னை பக்தி முயற்சிகளையும் பழக்க வழக்கங்களையும் மிகவாய் மதிக்க வேண்டும் என்று அனைத்துக் கிறிஸ்தவர்களையும் அன்போடு அழைக்கின்றது.

**மரியாள் பக்தியின் சிறப்புக்கள் மற்றும் புதிய கோணங்கள்**

மரியன்னை பக்தி என்றவுடன் பல நேரங்களில் நாம் செபமாலை சொல்லுவது, மரியன்னை திருத்தலங்களுக்கு யாத்திரை செல்வது மற்றும் அன்னை மரியாளின் உருவம் தாங்கிய சப்பரங்களை அலங்கரித்து அதைப் பவனியாக எடுத்துச் செல்வதை மட்டுமே வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஆனால் இவைகள் மட்டுமே உண்மையான மரியாள் பக்தி முயற்சிகள் அல்ல. இவைகளையும் கடந்து அன்னை மரியாள் பக்தியை பயனுள்ள ஓர் ஆன்மீக செயலாக நாம் மாற்றவேண்டும் என்று அன்னையாம் திருஅவை விரும்புகின்றது.

மேலும் அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும் 6 ஆம் பவுல் தன்னுடைய மரியியல் போதனையில் குறிப்பிடுகின்றார். முதலாவதாக அனைத்து கிறிஸ்தவர்களும் மரியாள் பற்றிய விவிலிய அறிவைப் பெற வேண்டும். அதாவது விவிலியத்தில் அன்னை மரியாளைப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது. அதற்கான விளக்கங்கள் என்ன என்பதை திருஅவைத் தந்தையர்கள் மற்றும் திருஅவையின் ஆசிரியத்தின் துணைகொண்டு புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

இரண்டாவதாக திருஅவையின் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் மரியன்னையினுடைய பெருவிழாக்கள் மற்றும் மரியாள் கோட்பாடுகள் பற்றிய வரலாறு, இறையியல் மற்றும் அதன் அர்த்தங்களைப் புரிந்துகொள்ள முயற்சிகள் எடுக்க வேண்டும். மூன்றாவதாக திருஅவைகளுக்கு இடையே ஓர் இணைப்பாளராக மரியாள் செயல்பட வேண்டும் என்ற ஆர்வத்தோடு இந்த மே மாதத்தில் அனைத்து திருஅவைகளையும் இணைந்து அன்னை மரியாள் திருஅவை என்னும் ஒரு குடும்பத்தின் தாயாக இருந்து அனைத்து திருஅவைகளையும் இணைக்கின்ற ஒரு கருவியாக எவ்வாறு செயல்பட முடியும் என்கின்ற கோணத்தில் சிந்திக்க வேண்டும்.

நான்காவது மானுடவியல் கோணத்தில் மரியாள் எவ்வாறு இன்றைக்கு உள்ள மனித சமுதாயத்திற்கு ஒருமாதிரியாக விளங்க முடியும். மரியியல் ஆன்மீகமானது எவ்வாறெல்லாம் மானுட சமுதாயத்தை வளப்படுத்த முடியும் என்கின்ற கோணத்தில் மரியியலை சமூகவியல், பெண்ணியம், விடுதலை ஆன்மீகமும், தலித்தியம், அரசியல் அறிவியல் மற்றும் மனித உளவியல் போன்ற மற்ற துறைகளோடு இணைத்துச் சிந்திக்க வேண்டும்.

இறைத்திட்டத்தை நிபந்தனையற்ற தாழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதால் தான் மரியாவை படைப்புக்கள் அனைத்திற்கும் மேலானவராக கடவுள் உயர்த்தியுள்ளார். இயேசு கிறிஸ்துவைக் குறித்த உண்மையைப் புரிந்துகொள்ள நாம் மரியாவிடம் செல்வது தேவையாக இருக்கிறது. என்று முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்டின் வார்த்தைகளை மனத்தில்கொண்டு மரியன்னையின் பிள்ளைகளாய் இயேசுவை அணுகுவோம்.

**தகவல்: இணையம்**

# அன்பிய வாழ்வே கிறிஸ்தவ நிறைவாழ்வு

அன்பிய வாழ்வே கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றி வாழும் உண்மையான சாரமுள்ள கிறிஸ்தவ சாட்சிய வாழ்வாகும். அன்பியங்களின் ஒன்றியமே திருஅவை (Communion of Communities) திருஅவை புதிய வழியில் இருக்கவும், இயங்கவும் புதிய பாதையில் பயணிக்கவும் அன்பியங்களே ஒரே வழியாகும். எனவே அன்பியங்கள் காலத்தின் கட்டாயம் என்று ஆசிய அன்பிய பொதுப்பேரவை 2006 இல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கூறியதை மேற்கோள்காட்டி வலியுறுத்தியுள்ளார்.

அன்பியங்களை புறக்கணித்துவிட்டுச் செயற்படும் திருஅவைகள் ஓர் எதிர்காலம் இல்லாத திருஅவையாகப் போய்விடும் என்று ஆபிரிக்க ஆயர்கள் மகாநாட்டில் 1994 இல் பேசிய மொசாம்பிக் நாட்டின் ஆயர் ஜோடோ சிலோத்தோ கூறியுள்ளார். அன்பியங்கள் திருஅவையின் உயிர்நாடித்துடிப்பின் அடையாளம் என்று திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 1988 இல் கூறியுள்ளார். 1978 இல் திருஅவையின் ஆசிய மகாநாட்டில் பங்கேற்றவர்கள் அன்பியங்கள் திருஅவையின் அவசரத்தேவை எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அன்பிய வாழ்வுதான் விண்ணகத் தந்தைக்கு திருவுளமான கிறிஸ்தவ நிறைவாழ்வு என திருத்தந்தையர்கள், ஆயர்கள், இறையியலாளர்கள் எனப்பலரும் கூறியிருக்கின்ற போதிலும இன்று திருஅவையின் பல மட்டங்களிலும் இன்றைய கடினமான சூழலிலும் அன்பியங்கள் தேவைதானா? என பல பக்கங்களிலுமிருந்தும் கேள்விகள் எழுந்த வண்ணமாகவே உள்ளன. திருப்பலி, மறைக்கல்வி, பக்திச்சபைகள் எனப் பல பணிகளையும் நடாத்துவதற்கே காலமும், நேரமும் போதாதென்ற கஸ்டமான சூழ்நிலைகளிலும் அன்பியங்களும் தேவைதானா? என்று பலரும் கேட்டவண்ணமாகவே உள்ளனர். ஆனாலும் இதற்காக யார் எவரையும் குறை கூறி விட முடியாது இப்படியான கேள்விகள் எழுவதற்கான பிரதான காரணம் அன்பியங்களின் முக்கியத்துவமும் அவசியமும் இன்னும் முழுமையாக உணரப்படாத நிலைமையும் அன்பியங்கள் பற்றிய சரியான புரிதலும், போதிய தெளிவுகளும், விளக்கங்களும், போதிய பயிற்சிகளும் அற்ற நிலைமைகளுமாகும்.

மேலும் பொருளாதாரச் சீரழிவின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து செய்வதறியாது உலகமும் மக்களும் விழிபிதுங்கி நிற்கின்ற நிலைமையிலும் மூன்று வேளையும் பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாமல் தவிக்கின்ற பெற்றோர்கள் ஒருபுறம், மறுபுறம் பொருளாதார நெருக்கடியினால் தொழில்வாய்ப்புக்களையெல்லாம் இழந்து நாளையப் பொழுது விடியுமா? என ஏங்கித் தவிக்கும் மக்கள் வேதனையின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த இக்கட்டான காலத்தில் வேதாந்தம் பேசுவது தவறாகத் தோன்றினாலும் உண்மையை (சத்தியத்தை) எடுத்துக் கூறவேண்டியதும் காலத்தின் கட்டாயமேயாகும்.

ஆனாலும் இறைவனுடைய வார்த்தைகள் வாழ்வைக் கொடுக்கின்றன என்பதற்கிணங்க இறைவன் இயேசுவின் உயிருள்ள வார்த்தைகள் எம் உள்ளங்களுக்கு ஆறுதலையும், தெளிவையும், நம்பிக்கையையும் தருவதாக அமையட்டும். மத் 6:33 இல் அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் (எமது அன்றாடத் தேவைகள் அனைத்தும்) உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். மத் 6:32 இல் ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர் உங்களுக்கு இவையாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். அவர் நமக்குத் தந்தை என்றால் நாம் அவருடைய பிள்ளைகளாக, அவருக்கே விருப்பமான வாழ்க்கையை வாழவும் அவருடைய மகனுடைய சாயலைத் தரித்தவர்களாகவும் நாம் வாழவேண்டும். நாம் அவருடைய ஆளுகைக்குள் இருக்கும் வரைக்கும் தீயவனால் எம்மை அணுகவோ, நெருங்கவோ முடியாது. பாவத்தையும், தீமையான எண்ணங்களையும் மேற்கொண்டவர்களாக கடவுளுக்கு உகந்த உண்மையும் உத்தமமும் உள்ளவர்களாக வெற்றி நிறைந்த விடுதலை வாழ்வு வாழமுடியும். அதனால் தான் அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள் என்றார்.

ஆண்டவர் எம்முடைய இருதயங்களை ஆட்சி செய்யாதவரைக்கும் அவர்களால் இறையாட்சிக்குள் பிரவேசிக்கவோ, இறையாட்சியை நாம் வாழும் இடங்களில் மலரச்செய்யவோ எங்களால் முடியாது. ஏனெனில் ஆண்டவர் ஆட்சி செய்யும் மனங்களில் தான் இறையாட்சியின் விழுமியங்களான அன்பு, அமைதி, நீதி, சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற பண்புகள் மலரமுடியும்.

பாடுகள், இன மத மொழி வேறுபாடுகள், பிளவுகள், பிரிவுகள் அனைத்தையும் எம் உள்மன ஆழத்திலிருந்து அழித்து அகற்றி விட்டு உண்மையான மனமாற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இறைஅருளை இறைவனிடம் மன்றாடிப் பெற்றுக் கொண்டு இறைதந்தையின் பிள்ளைகள் நாம் என்ற உணர்வோடு எம் அகக்கண்களை மறைத்துக் கொண்டிருக்கும் சுயநலத் திரையைக் கிழித்தெறிந்துவிட்டு பொதுநல எண்ணங்களை,



இயேசுவோடு கூடவே வாழ்ந்த திருத்தூதர்கள் இயேசுவைப் பின்பற்றி வாழ்ந்த சீடர்கள் புனித மரியாள் என 120 பேரும் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட பின் புனித பேதுருவானவரின் அருளுரையால் மனம்மாறி இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட மூவாயிரம் பேர், ஐயாயிரம் பேர் என தொடக்கால திருஅவையினர் அனைவருமே திருத்தூதர்கள் வழியாகப் பெற்றுக்கொண்ட இயேசுக்கிறிஸ்துவின் போதனையின் அடிப்படையில் (மத் 28:19-20) தான் அதாவது இயேசுக்கிறிஸ்து தம்முடைய திருத்தூதர்களுக்கும் சீடர்களுக்கும் அவர்கள் எப்படி வாழவேண்டுமென்ற வாழ்க்கையின் அனுபவங்களைத்தான் தம்முடைய வார்த்தைகளினாலும், வாழ்க்கையினாலும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி கற்றுக்கொடுத்த வாழ்க்கை முறையின் அடிப்படையில் தான் அவர்களது வாழ்வும் வார்த்தைகளும், செபமும், செயல்களும் நம்பிக்கைவாழ்வும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகவும், ஒத்துப்போவதாகவுமே காணப்பட்டதைக் காண்கின்றோம். அவர்களுக்கிடையில் பிளவுகள், பிரிவினைகளோ, ஏற்றத்தாழ்வுகளோ, பாகுபாடுகளோ காணப்படவில்லை. அனைவரும் ஒரே மனமும் ஒரே உள்ளமும் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் கொண்டவர்களாக அன்பியமாய் வாழ்வதே இயேசுவின் இலட்சியம் எனக் கண்டுணர்ந்து இயேசுவுக்கு சாட்சிகளாய்த் திகழ்ந்தனர்.

இயேசு ஆண்டவர் எப்படி விண்ணகத் தந்தையோடு ஒன்றித்து வாழ்ந்தாரோ அதைப்போலவே விண்ணகத் தந்தையின் பிள்ளைகளான நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒரு மனப்பட்டவர்களாக கடவுளுடைய குடும்பமாக வாழ வேண்டும் என்பது தான் இயேசு ஆண்டவரின் விருப்பமாகும். அதனால் தான் தூய தந்தையே! நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக என்று விண்ணகத்தந்தையை நோக்கி செபிப்பதைக் காண்கின்றோம்.

நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தந்தையாம் இறைவனோடு ஒன்றித்திருப்பது போல விண்ணகத் தந்தையின் பிள்ளைகளான நாமும் எமக்குள் இருக்கின்ற இறையாட்சிக்கு எதிரான கசப்புகள், வெறுப்புகள், பாகு நோக்கங்களை நாடித்தேடி அவைகளை எம் மனக்கண்களில் விரிவுபடுத்திக் கொண்டு 'உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்கள் மீதும் அன்பு கூர்வாயாக' என்னும் இயேசுக் கிறிஸ்துவின் உயிருள்ள வார்த்தைகளுக்கு எம் அன்றாட வாழ்வில் உயிர் கொடுத்து அதையே எம் வாழ்வாக்கித் தேவையில் உழலபவர்கள், வறுமையில் வாடுபவர்கள், விதவைகள், அனாதைகள் என அனைவர் மேலும் அன்பு பாராட்டி எம்மாலான உதவிகள் செய்து அவர்களுக்கு ஆறதலளித்து பகைவர்களையும் எம்மை வெறுப்பவர்களையும் அன்பு செய்து நன்மை செய்பவர்களாகவும் அதிகாரம் செலுத்துவதற்குப் பதிலாக அன்பு செய்பவர்களாகவும், பணிவிடை புரிபவர்களாகவும் வாழ்ந்து எம்மைத் தாழ்த்திக் கொண்டு இயேசு ஆண்டவருக்கே விருப்பமான சகலரும் சமம், சகலருக்கும் சமம் என்னும் பொதுநலம் நிறைந்த அன்பும், நீதியும் நிறையப் பெற்ற சமதர்ம சமுதாயத்தை நாம் வாழும் இடங்களில் நிலைப்படுத்தி இறையாட்சியை கட்டியெழுப்புவதன் மூலமாக இயேசுக்கிறிஸ்துவின் இலட்சியக் கனவை நனவாக்கி அவரை மாட்சிப்படுத்தி வாழ்வதற்காக நாம் குடும்பம் குடும்பமாக அன்பியங்களில் இணைந்து இறையாட்சி மலர்ந்து மணம்பரப்ப எம்மை முற்றும் முழுவதுமாக ஆண்டவர் இயேசுவுக்கு எம்மை அர்ப்பணித்து வாழ்வோம்.

நாம் நமது அன்பியங்களை நற்செய்தி மதிப்பீடுகளின்படி கட்டி எழுப்பும்போது விண்ணக வாழ்வை இம்மண்ணுலகிலேயே சுவைத்து மகிழ்ந்து வாழமுடியும். யார் யாரெல்லாம் இம்மண்ணுலகில் வாழும்போதே அன்பியங்கள் வழியாக இறையாட்சியை கட்டியெழுப்புவதற்காக தங்கள் தங்கள் நேரங்களை, காலங்களை, செல்வங்களை, பிரயாசங்களையெல்லாம் ஆண்டவரின் மகிமைக்காகவும் இறையாட்சியின் மலர்ச்சிக்காகவும் பயன்படுத்தி அன்பிய வாழ்வின் ஊடாக இறையாட்சியை சுவைத்து அனுபவித்து மகிழ்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் மோட்ச பேரின்ப பாக்கியத்தை (விண்ணக வாழ்வை) நிட்சயமாக சுவைத்து மகிழ்வார்கள்.

தொடரும்...

செ. செல்வராஜ் (பெரிய உப்போடை)

# இறை வேண்டல் என்றால் என்ன?

இறைவேண்டல் என்பது கடவுளின் கைகளில் நம்மை ஒப்படைத்துவிட்டு அவருடைய திருவுளம் நிறைவேறக் காத்திருப்பது என்பார் அன்னைத் திரேசா. உண்மை தான் கடவுளின் திருவுளம் நிறைவேற நாம் மன்றாடினால் நம்முடைய தேவைகள் நிறைவேறும் என்பது உறுதி. ஆகவே நாம் 'இறைவா உம்முடைய திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக' என்று மன்றாடுவோம். அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

நற்செய்தியில் இயேசுவின் சீடர்கள் அவரிடம் வந்து யோவான் தன்னுடைய சீடர்க்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்தது போல் எங்களுக்கும் கற்றுக்கொடும் என்று கேட்கின்றார்கள். இயேசு தன்னுடைய சீடர்க்கு எப்படி இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்தார். என்பதைக் குறித்துச் சிந்துப் பார்க்கும் முன்னம் யோவான் தன்னுடைய சீடர்க்கு இறைவேண்டல் செய்ய எப்படிக் கற்றுக்கொடுத்தார் என்பதையும் அவருடைய வாழ்வு எப்படி இறைவேண்டலில் நிலைத்திருந்தது என்பதையும் குறித்துச் சிந்தித்துப் பார்ப்போம்.

நீங்கள் அவ்வாறு செபிக்க வேண்டாம் ஏனெனில் உங்களுக்கு என்ன தேவையென்று உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே நீங்கள் இவ்வாறு செபியுங்கள் (காண் மத் 6:7-15) நம்மை அறியாமலேயே நாம் கற்றுக்கொண்ட பல பழக்கங்களில் ஒன்று செபித்தல்.

செபம் என்பது அடிப்படையில் ஒரு தகவல் பரிமாற்றம். கீழிருக்கும் ஒருவர் மேலிருக்கும் ஒருவரை நோக்கி தன் தேவைக்காகத் தகவல் பரிமாற்றம் செய்வது செபம் அல்லது மன்றாட்டு. ஆக இங்கே இருவர் இருக்கின்றனர். ஒருவர் தேவையில் இருப்பவர் மற்றவர் தேவையைப் பூர்த்தி செய்பவர். செபம் எப்பொழுதும் கீழிருந்து மேல்நோக்கி செல்கின்றது.

செபம் பற்றியும் செபத்தில் தேவையான விடாமுயற்றி பற்றியும் நற்செய்தி நூல்களும் புதிய ஏற்பாட்டு கடிதங்களும் நிறையவே சொல்கின்றன. மேலும் செபத்தில் தேவையான நம்பிக்கை, மனவுறுதி ஆகியவையும் அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றன. புறவினத்தாரின் செபம் போல உங்கள் செபம் இருக்கக் கூடாது என்று தன் சீடர்களுக்கு வலியுறுத்துகின்ற இயேசு ஒரு முன்மாதிரியான செபத்தையும் தருகின்றார்.

அப்படி இருக்கக் கூடாது ஆனால் இப்படி இருக்க வேண்டும் என்று சொல்லும் இயேசு இடையில் சொல்வது, 'உங்களுக்கு இவையெல்லாம் தேவையென்று உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும்!' ஆக இந்த வார்த்தை முன்னிறுத்துவது என்ன? நம் தந்தை வானத்தில் இருக்கிறார். நாம் கீழே பூமியில் இருக்கிறோம். செபம் கீழேயிருந்து மேல் நோக்கிப் புறப்பட்டுச் செல்கிறது. இப்போது நம்முடைய கேள்வி என்னவென்றால் அவருக்குத்தான் நம் தேவை என்ன என்று தெரியுமே அப்படியிருக்க நாம் ஏன் அதைக் கேட்க வேண்டும்?

தினமும் காலையில் எழுந்தவுடன் கடவுளுக்கு நாம் நினைவுபடுத்த வேண்டுமா என்ன? இன்றைக்கு நான் இதைச் செய்யப்போகிறேன். அவர்களைப் பார்க்கப் போகிறேன் நீண்ட பயணம் போகின்றேன் நீர்தாம் காத்துக்கொள்ள வேண்டும். அப்படியென்று சொல்ல வேண்டுமா? செபம் கடவுளுக்குத் தேவை என்பதல்ல. அது நமக்குத் தேவை இந்தச் செபம் தான் கடவுளின் உடனிருப்பை நமக்கு நினைவுபடுத்துகின்றது.

நமக்கு உறவினர்கள் அல்லது நண்பர்கள் இருக்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். எதற்காக அவர்களோடு உரையாட நாம் பிரியப்படுகின்றோம்? பேசாவிட்டால் உறவு முறிந்து விடும் என்பதற்காகவா இல்லை. நம் உரையாடலில் நாம் ஒருவர் மற்றவரோடு இருக்கின்ற உடனிருப்பை ஒருவருக்கொருவர் நினைவுபடுத்திக் கொள்கின்றோம். ஆனால் கடவுளுக்கு இந்த நினைவுபடுத்தல் தேவையில்லை நமக்குத் தேவையாக இருக்கிறதே!

ஆகவே, செபம் என்பது ஒரு நினைவூட்டல் யாருக்கு? நமக்கு யாரைப் பற்றி? கடவுளைப் பற்றி! பல நேரங்களில் செபம் என்பது நமக்கு ஒரு தேவையான ஒன்றைக் கேட்பது போலத்தான் இருக்கிறது. இது வேண்டும் அது வேண்டும் நான் நல்லாப் படிக்கணும் என் மகளுக்கு நல்ல வரன் அமையணும் இப்படி விண்ணப்பங்கள் தான் அதிகம் இருக்கிறது.

ஒரு சிலர் சொல்வார்கள் முதலில் புகழ்ச்சி இரண்டு மன்னிப்பு மூன்று நன்றி நான்கு விண்ணப்பம் என நம் செபம் இருக்கவேண்டும். இது எப்படி இருக்கிறது என்றால் முதலில் உள்ள மூன்றும் கடவுளின் தலையில் ஐஸ்கட்டி வைப்பது போலத்தான் இருக்கின்றது.

செபம் என்பது ஒரு உறவு. அதற்கு வார்த்தைகள் தேவையில்லை மௌனம் கூட செபம் தான். நம் உள்ளத்தின் உள்ளறையில் இருக்கின்ற இறைவனோடு நாம் ஏற்படுத்தும் உறவே செபம்.

**கிறிஸ்தோபர் ஹொபிகா**

# செபமாலை

செபமாலை ஒரு குட்டி நற்செய்தி,
செபமாலை என்னுடைய ஆயுதம்
என்றார் புனித தந்தை பியோ,
அன்னை மரியாவுக்கு மிகவும் பிடித்த
செபம் மங்கள வார்த்தை செபம்.

செபமாலை மலர்கள் மூவொரு
கடவுளுக்கும் அன்னை
மரியாவுக்கும் மிகவும் பிடித்த
மலர்கள், எப்போதும் மணம் வீசும்
மலர்கள், நித்தியமும் வாடாத மலர்கள்,
செபமாலை விண்ணக மலர்கள்,
நம்மை விண்ணகம் சேர்க்கும்
மலர்கள், செபமாலையில் உள்ள
இயேசு கற்பித்த செபம் வெள்ளை
ரோஜாக்கள், மங்கள வாரத்தை செபம்
சிவப்பு ரோஜாக்கள், இவ்விரு நிற
மலர்களும் ஒன்று சேர்ந்து ரோஜா
மாலையாகி அன்னை மரியாவின்
பாதம் சேர்கின்றன மலர்க்கிறீடம் ஆகி,

அன்னை மரியாவின்
சிரசினை அலங்கரிக்கின்றன,
சற்று சிந்திப்போம். செபமாலையை
கையில் ஏந்தும் இந்த செப
ஆண்டிலே அதிகமான மலர்க்
கிறீடங்களால் அன்னையின்
சிரசினை அலங்கரிப்போம்.
அன்னையின் ஆசீரைப் பெறுவோம்.

**அனுரா இவான்ஜலிசன்**

## திருமலைத் தீபத்தின் இம்மாதப் பக்கம்
## புனித மரியாள் பேராலய பங்கு மக்களுக்கு

# மூன்றெழுத்து மூச்சு

தன்னைத் தேடி முடிவில் தன்னை மறந்து பிறரை அடையும் பேராற்றல் கொண்ட உயிர் அந்த மூன்றெழுத்து மூச்சு தான் செபம். மனித வாழ்வின் மாண்பிற்கும் மனித உறவின் வளர்ச்சிக்கும் ஆதாரமும் அடிப்படையுமாக அமைவது செபம்.

உள்ளுணர்வு விதையைப் பிறர் சேவை மரமாக மாற்றிடும் நிலம். ஏழை எளியவர்களின் வாய்மை மனிதத் தன்மைக்குள் இறைதன்மையை ஊற்றெடுக்கச் செய்ய உதவுவது தான் செபம் “எங்கும் உறையும் இறையை தன்னுள் உயிர்கொள்ள வைக்கவும், தன்னுள் உறைந்த இறையை மண்ணிலும் மக்களிலும் கண்டுணரச் செய்வதும் செபம். செபம் என்பது இறைவனோடு நாம் கொள்ளும் உன்னத உரையாடல் அது சூல் கொண்ட சோகங்களை கால் கொண்டு நசுக்குமிடம்.

இன்று பலரிடம் காணப்படும் கேள்வி எப்படி செபிப்பது? எதற்காக செபிப்பது? முக்கியமாக நாம் செபிப்பது நிச்சயம் கேட்கப்படுமா என்ற குழப்பநிலை அதிகரித்து விட்டது. ஒருவர் செபிப்பதில் ஈடுபட்டாலும் நம் வாழ்வில் தொடர்ந்து வரும் துன்பங்களை கண்டு தளர்ந்து இறைபற்றை இழந்து செபிப்பதையும் நிறுத்திவிடுவர் இவ்வாறு மனந்தளராமல் செபிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி திருவிவிலியத்தில் இயேசு கூறிய உவமை “நேர்மையற்ற நடுவரும் கைம்பெண்ணும்” என்பதில் ஆழமாக கூறியுள்ளார். இவ் உவமை மூலம் இயேசு நமக்குத் தரும் செய்தி நேர்மையற்ற நடுவரே கைம்பெண்ணின் தொல்லை தாங்காமல் நீதி வழங்கினார் என்றால் நீதியுள்ள கடவுள் தம்மிடம் இடைவிடாமல் கேட்கும் விண்ணப்பங்களை நிச்சயம் தருவார் என்றும் மனந்தளராமல் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டும். செபத்தில் நாம் எவ்வளவு நேரம் செலவழிக்கின்றோம். என்பதை விட எவ்வளவு ஆர்வமாக விழிப்புணர்வுடன் இறைவனின் குரலுக்கு செவிசாய்க்கின்றோம் என்பதே முக்கியமாகும்.

நம் மீட்பராம் இயேசு இறைமகனாக இருந்த போது தந்தையின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அடிக்கடி செபித்தார். செபிப்பதற்கு சொல்லிக் கொடுத்தவரே அதை தம் வாழ்வில் பல சமயங்களில் செய்து காண்பித்தார். இறுதியாக கெஸ்தமனியில் கண்ணீரும், வியர்வையும், இரத்தமுமாய் செபித்தார். “கேளுங்கள் தரப்படும்” என்று அவர் கூறியது கதறி ஆர்ப்பாட்டம் செய்யுங்கள் என்று அல்ல, மாறாக பிள்ளைகள் என்ற உரிமையை பெற்றுள்ளதால் அந்த உரிமையில் கேளுங்கள் என்கிறார். ஏனெனில் உன் தந்தை கேட்பதற்கு முன்பே உன் தேவைகளை அறிவார். அதை உன் விருப்பப்படி அல்ல அவர் சித்தப்படி நிலைக்கச் செய்வார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

செபம் செய்வதற்குக் கடவுள் நம்பிக்கையும் மனித முயற்சியும் இணைந்து செயல்பட வேண்டும். செபத்தினால் எல்லாம் கைகூடும் என்று எண்ணி மனித முயற்சியை கைவிடலாகாது. “மோசே மலைமீது தம் கைகளை உயர்த்திச் செபித்தார். அதேநேரம் யோசுவா தரையில் வாளை உயர்த்தி எதிரிகளை வெட்டி வீழ்த்தினார்.” கடவுளே எல்லாம் பார்த்துக் கொள்வார் என்று சும்மா இருப்பது கடவுள் நம்பிக்கை ஆகாது. மாறாக அது கடவுளை சோதிப்பது “ கடவுள் கொடுப்பதை மனிதர் தடுக்க முடியாது, கடவுள் தடுப்பதை மனிதர் கொடுக்க முடியாது”

மார்க்கோணி கடவுள் நம்பிக்கை இல்லாதவராக வாழ்ந்த சூழ்நிலையில் செபிப்பவர்களைக் கேலி செய்வாராம் “எங்கோ இருக்கிற கடவுள் நீங்கள் முணுமுணுக்கிற செபங்களை எவ்வாறு கேட்க முடியும்? என்று சொல்வாராம். சிறிது காலம் கழித்து அவர் வானொலியைக் கண்டுபிடித்த பின்னர் பல மைல் தூரத்திற்கு அப்பால் அவர் பேசிய பேச்சை மக்கள் கேட்ட போது அவருக்கு ஒரு உண்மை உதயமாயிற்று. சாதாரண மனிதனாகிய நான் இவ்வாறு செய்யும் போது கடவுள் மக்களுடைய செபத்தைக் கேட்கிறார் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்.

புனித அகுஸ்தினார் கூறுவது போல 'நன்றாகச் செபிக்கத் தெரிந்தவன் நன்றாக வாழத் தெரிந்தவன் ஆவான்' நம் வாழ்வில் செபத்தில் வளர்ச்சி பெறுவோம். “ஒருவர் உள்ளத்தில் செபத்தின் மூலம் ஆறுதலை உணராவிடினும் முயற்சியோடு கவனத்தோடு அன்போடு செபித்தால் செபத்திற்கு மதிப்பு உண்டு” என்று புனித திரேசாள் கூறுகின்றார். எனவே நமது வாழ்வு வளம் பெற ஆன்மீக வாழ்வு முதிர்ச்சி காண செபிப்போம். செபமே நம் வாழ்வின் ஒளி.

**நகோமி**

இளைஞர்கள் என்போர் முதிர்ச்சிக்கும் பிள்ளைப் பருவத்திற்கும் இடையிலான நிலைமாறும் பருவம். அதாவது முதர்ச்சியின் அடையாளங்களும் பிள்ளைத்தனத்தின் தன்மைகளும் கலந்திருக்கும் பருவம். ஒரு மனிதனின் வாழ்வில் குழப்பம் நிறைந்த பருவம், புரட்சிகரமான பருவம், கட்டுக்கடங்காத பருவம் என இப்பருவத்தினை வர்ணிப்பர்.

ஒரு மனிதனின் இளமைப்பருவமானது 13 வயது தொடக்கம் சுமார் 30 வயது வரையான காலகட்டத்தை உள்ளடக்கி இருக்கும் என வரையறை செய்யலாம். இந்த வயது வரையறை தொடர்பில் உளவியலாளர்களிடையே பல அபிப்பிராய பேதங்கள் உண்டு. இருந்தாலும் இந்த இளமைப்பருவத்திற்குள் ஒரு மனிதனின் பதின்ம பருவமும் கட்டிளமைப்பருவமும் உள்ளடங்கி காணப்படும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டிற்குள் வரமுடியும்.

இளைஞர்களை வளப்படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலுமே ஒரு சமூகத்தின் தலைவிதி அமைந்துள்ளது. அதுமாத்திரமன்றி ஒரு சமூகத்தின் பலம் மற்றும் சக்தி இந்த இளைஞர்களே ஆகும். ஒரு மனிதன் குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம் என்பவற்றைக் கடந்து இளமைப்பருவத்தினை அடையும் போது அவனில் பல மாற்றங்கள் ஏற்படுவதை இயல்பாக அவதானிக்க முடியும். அந்தவகையில்

**இளைஞர் பருவத்தினரை பாதிக்கும் காரணிகள்**


- உடல் உள மாற்றங்கள்
- குடும்பச் சூழல்
- பெற்றோர் - இளைஞர் உறவில் விரிசல்
- சமவயதுக் குழுக்களின் ஆதிக்கம்
- கையடக்கத் தொலைபேசிப் பாவனை
- காதல் விவகாரமும் தகாத பாலியல் உறவும்



**இளைஞர்கள் எதிர்கொள்ளும் இன்றைய சவால்கள்**

- உளவியல்சார் நெருக்கடிகள்
- தொழில் சந்தைக்கு தயாரில்லாமை
- முறையான வழிகாட்டலின்மை
- போதைப் பொருள் பழக்கம்

# மாறும் உலகில் இளைஞர்களும் உளநல ஆரோக்கியமும்



**இளைஞர் பருவத்தில் ஏற்படும் உளரீதியிலான மாற்றங்கள்**

இப்பருவத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பொதுவாக உடல், உளம், நடத்தை உணர்வுகள் மற்றும் சமூக ரீதியிலான மாற்றங்கள் என வகைப்படுத்த முடியும். குறிப்பாக உளரீதியில் ஏற்படும் மாற்றங்களாக பின்வரும் சில முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

- இலட்சியவாத சிந்தனை, புரட்சிகர சிந்தனை உருவாகுதல்.
- தனது அடையாளத்தை வெளிப்படுத்த முனைதல்
- தங்கிவாழும் மனநிலை உருவாதல்
- காதல் வயப்படல்
- அடிக்கடி கோபப்படல்
- சட்டம், ஒழுங்குகளை மீறுதல்

**இளைஞர்களில் ஏற்படும் உளரீதியிலான பிரச்சனைகள்**

இன்று இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் மிக முக்கியமானதொன்றாக அவர்களது உளநலத்துடன் தொடர்பான பிரச்சனைகள் காணப்படுகின்றன. உலகில் ஏற்படும் உளப்பிரச்சனைகளில் உளநோய்களில் அரைவாசிக்கு மேற்பட்டவைகள், 14 வயதிலிருந்தே உருவாகுவதாகவும், அவற்றில் அனேகமானவற்றை தடுக்கவும் தீர்க்கவும் முடியாமல் போவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது. மேலும் தற்காலத்தில் 15 தொடக்கம் 29 வயதிற்கு உற்பட்டவர்களின் மரணமானது மனச்சோர்வு மற்றும் தற்கொலை மூலம் நிகழ்வதாக அந்நிறுவனம் குறிப்பிடுகின்றது. அந்தவகையில் பின்வரும் சில உளப்பிரச்சனைகள் இளையோரில் இன்று காணப்படுகின்றது.

- மன அழுத்தம் - மனச்சோர்வு
- அச்சம் அல்லது பயம்
- பதட்டம்
- குழப்பமான மனநிலை

**இளைஞர்கள் தங்களது உளநலத்தை பேணிக் கொள்வதற்கான சில ஆலோசனைகள்**

- கொள்ளளவு விருத்தி
  இன்றைய சவால்மிகுந்த, போட்டியான உலகில் இளைஞர்கள் தங்களது கொள்ளளவினை வளர்ப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். அந்தவகையில் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு ஆகிய விடயங்களை விருத்தி செய்துகொள்ள முயற்சித்தல் வேண்டும். குறிப்பாக திறன்களை வளர்ப்பதில் தங்களைச் சூழவுள்ள வாய்ப்புக்களையும் வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

- மனவெழுச்சிகளைக் கையாழ்தல்
  இளைஞர் பருவத்தில் உணர்வுகள் மற்றும் மனவெழுச்சிகள் என்பன புயலாக தோன்றும் பருவமாகக் காணப்படும். இவ்வாறான உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் ஆரோக்கியமான முறையில் முகாமை செய்கின்ற அறிவார்ந்த ரீதியில் கையாழ்கின்ற பயிற்சிகளை தன்னில் வளர்த்துக்கொள்ளல் வேண்டும்.




- மன அழுத்தத்தை முகாமை செய்தல்
  ஒரு இளைஞர் தனது வாழ்வில் ஏற்படும் மன அழுத்தத்தை முகாமை செய்யக் கற்றுக்கொள்ளல் வேண்டும். அந்தவகையில் தனது பலம், பலவீனம் என்பவற்றை அறிந்து தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளல், நேரத்தை முகாமை செய்தல், குடும்பம் தொழில் சமூகம் தொடர்பான அலுவல்களில் ஈடுபாடுகளில் சமநிலை பேணுதல், மன நிலைத்தன்மையைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றில் இளைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும்.


- நல்ல நண்பர்களுடன் உறவை வளர்த்தல்
  இளைஞர்கள் தனது வாழ்வில் கொண்டுள்ள குறிக்கோள்களை அடையும் வகையிலும் தன்னை சிறந்த வழியில் நடாத்தக்கூடிய விதத்திலும் உதவக்கூடிய சக நண்பர்களுடன் உறவினைப் பேணுதல் நல்லது.

- ஆன்மீகக் கடமைகளில் ஈடுபடுதல்
  இளைஞர் பருவத்தில் ஏற்படும் கோளாறுகளையும் பிறழ்வுகளையும் எதிர்கொண்டு அதனை ஒரு ஆரோக்கியமான முறையில் பக்குவப்படுத்துகின்ற சக்தி ஆன்மீகத்திற்கு உண்டு. அந்தவகையில் சமயங்கள் போதிக்கின்ற ஆன்மீகக் கடமைகளில், வழிபாடுகளில் இளைஞர்கள் தங்களை முற்றாக ஈடுபடுத்தி தங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே மாறிக்கொண்டு செல்கின்ற இன்றைய உலகில், இளம் சமுதாயத்தை அது எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாத்து உள ஆரோக்கியமுள்ள நல்ல வளமான சமூகமாக உருவாக்கி எடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து செயற்படுவோம்.



## படித்ததில் பிடித்தது



ஒரு ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார் ஒரு நாள் அவர் தன் தோட்டத்தில் விளைந்த வாழைக்குலை ஒன்றை பணியாளரிடம் கொடுத்துக் கோவிலில் கொடுக்கச் சொன்னார்.

ஏழைப் பணியாள் எடுத்துச் செல்லும் வழியில் அவனுக்கு அதிகப் பசியெடுக்கவே அக்குலையிலிருந்து இரண்டு பழங்களைப் பிய்த்துச் சாப்பிட்டு விட்டான்…

மீதிப் பழங்களை கோவிலில் கொடுத்தான் அன்றிரவு செல்வந்தர் ஒரு கனவு கண்டார் கனவில் இறைவன் வந்து நீ எனக்குக் கொடுத்த இரண்டு பழங்களை நான் சாப்பிட்டேன் ருசியாக இருந்தது என்றார்.

செல்வந்தனுக்கு மிகக் கோபம் வந்தது ஒரு குலை பழம் கொடுத்திருக்க இரண்டு மட்டுமே இறைவனுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. மீதி என்னவாயிற்று எனக் கோபப்பட்டான்.

மறு நாள் காலை பணியாளைக் கூப்பிட்டு விசாரித்தான்.

அவன் இரண்டு பழங்களைப் பசியினால் தான் சாப்பிட்டதை ஒப்புக் கொண்டு மீதிக் குலையைக் கோவிலில் கொடுத்து விட்டதைச் சொன்னான்.

செல்வந்தனுக்கு புரிந்தது அந்த ஏழை சாப்பிட்ட பழம் மட்டுமே இறைவனைச் சென்று அடைந்திருக்கிறது என்று.

**ஏழையின் பசி**

ஜோ. நோமன் பல்தஸார், ஓய்வு நிலை அதிபர்

மாணவர் தீபம்

மடல் – 03

# இன்று முதல் உன்னை மாற்றிக் கொள்

எண்ணமே செயலின் தொடக்கம்
திட்டமிடல் எல்லாச்
செயலாக்கத்திற்கும் முன் செல்கிறது. (சீராக் 37:16)

இந்த ஆண்டின் முதலாம் தவணைப் பரீட்சை புள்ளிகள் கிடைத்திருக்கும். சில மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்றிருப்பீர்கள். சிலர் குறைவான புள்ளிகளைப் பெற்றிருப்பீர்கள்.

குறைவான புள்ளிகளை ஏன் பெற்றாய் என்று கேட்டவுடன் அதற்கொரு பதிலை வைத்திருப்பாய் அது என்ன பதில்! நான் படிக்கவில்லை எனக்கு விளங்கவில்லை டீச்சர் சிலருக்கு மட்டும் தனியாக விளங்கப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டையும் கூறுவாய்.

இது எல்லாம் உனது சரியான பதில் அல்ல. நீ படிக்கவில்லை என்றால் அதற்கு யார் காரணம்? ஏன் படிக்கவில்லை என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்? விளங்கவில்லை என்கிறாயே ஆசிரியரிடம் திரும்பிக் கேட்டாயா? சிலருக்கு மட்டும் தனியாக ஆசிரியர் விளங்கப்படுத்துகிறார் என்று சொல்கிறாயே அது பற்றி சரியான விளக்கம் உனக்கு கிடைக்கவில்லை என்று நினைக்கின்றேன்.

சில நன்றாக படிக்கக்கூடிய மாணவர்கள் ஆசிரியரிடம் சில சந்தேகங்களைக் கேட்பது வழக்கம். அதற்கு ஆசிரியரும் அந்த மாணவனுக்கு சில விளக்கங்களையும் கொடுக்க வேண்டியிருக்கும் அவ்வாறு கொடுக்கும் போது நீங்கள் அதைத் தவறாகப் புரிந்து கொண்டு இவ்வாறு அவதூறு கூறுவது பொருத்தமில்லை.

எறும்பைப் பாருங்கள் அதன் செயல்களைக் கவனித்து ஞானமுள்ளவராகுங்கள். அதற்கு தலைவனும் இல்லை கண்காணியுமில்லை, அதிகாரியுமில்லை எனினும் கோடையில் உணவைச் சேர்த்துவைக்கும். அறுவடைக் காலத்தில் தானியத்தைச் சேர்க்கும் (நீ.மொ 6:6-8)

சாதாரண எறும்புக்கே இத்துணை அறிவு இருக்கும் போது தூய ஆவியின் வல்லமை பெற்ற உனக்கு எத்துணை அறிவு இருக்க வேண்டும். உனக்கு உதவி செய்ய எத்தனை பேர் இருக்கிறார்கள். என்பது உனக்குத் தெரியுமா? அவர்களின் உதவியை பெற்றிருக்கலாம் அல்லவா? யார் அவர்கள் முதலில் உன் பெற்றோர், நல்ல ஆசான், உதவ இருப்பார்கள். கற்பதில் உனக்கு உள்ள பிரச்சனை என்ன என்பதை அவர்களுடன் மனம் திறந்து பேசு. நீ ஏன் கல்வியில் பின்தங்கி நிற்கின்றாய் என்பதை நீயே யோசி.

உனக்கு நண்பர்கள் நிறையப் பேர் இருப்பார்கள். அவர்களுள் "உடுக்கை இழந்தவன் கை போல – ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்று வள்ளுவப் பெருந்தகை நட்பைப்பற்றி கூறியுள்ளார். துன்பம் வரும்போது உதவுபவன் தான் உண்மை நண்பன்.

வேதாகமம் என்ன கூறுகிறது தெரியுமா, "கடுஞ்சினங் கொள்பவனோடு நட்புக் கொள்ளாதே, எரிச்சல் கொள்பவனோடு தோழமை கொள்ளதே. அப்படிச் செய்தால் அவர்களின் போக்கையே நீயும் கற்றுக் கொள்வாய். (நீ.மொ 23:24) நண்பர்களால் உனக்கு நன்மை இல்லையெனில் அந்த நண்பர்கள் எதற்கு? உன் கல்விக்கு உதவாத நண்பர்கள் உனக்குத் தேவையில்லை. கல்விக்கு உதவும் நல்ல நண்பர்களுடன் மட்டும் பழகு, அவசியமற்ற நண்பர்களைக் குறைத்தால் உனக்கு கல்வி தானாக வரும்.

தேவையில்லாத விடயங்களில் தலையிட்டு நேரத்தையும் பொழுதையும் வீணடித்தால் படிப்பதற்கு ஏது நேரம், நிறைவாக சொல்லுகின்றேன். கற்றலில் குறைந்த நீ எப்போதும் எல்லா நேரமும் படிப்பதில் நோக்கமாயிரு. புத்தகமும் கையுமாயிரு அடிக்கடி வாசி, கடந்த கால வினாக்களுக்கு விடை எழுதிப் பழகு. அதை ஆசானிடம் காண்பி பிழையானதை திருத்திக் கொள். மீண்டும் வாசி, மீண்டும் எழுது இப்படி ஒவ்வொரு நாளும் பயிற்சியை மேற்கொண்டால் கல்வி உன்னை நாடி வரும்.

உன் மனதில் உறுதியை வளர்த்துக்கொள். உனது கல்வியை நீதான் தேடவேண்டும். உன்னால் முடியும் என நம்பு சாதிப்பேன் என வைராக்கியம் கொள் நிச்சயம் சாதிப்பாய் இலட்சியப் பாதையை அடைவேன் என திடசங்கட்பம் கொள் நிச்சயம் அடைவாய்.

மூச்சு விட்டுக் கொண்டிருப்பவர் எல்லாரும் மாணவர் அல்ல. முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள் மட்டும் தான் மாணவர்கள் என்பதை மறவாதே. நம்மால் முடிந்தவரை செய்வதல்ல முயற்சி. நினைத்த செயலை வெற்றிகரமாக முடிக்கும் வரை செய்வதே உண்மையான முயற்சி. மறவாதே, கற்றுக் கொள்வதை ஒரு போதும் நிறுத்தாதே. ஏனென்றால் கற்றுத் தருவதை வாழ்க்கை எப்போதும் நிறுத்துவதில்லை.

# தொழிலாளர்களின் பாதுகாவலரானா புனித யோசப்பின் விழாவை மே தினமாக திருஅவை கொண்டாடுகின்றது



நாம் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசப்பின் விழாவை மே 01 ஆம் திகதி கொண்டாடி மகிழ்கின்றோம். இவ்விழாவானது 1955 ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி திருத்தந்தை 12ம் பத்திநாதரால் தொடங்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியின் காரணமாக தொழிலாளர்களின் உழைப்பு அதிகமாக சுரண்டப்பட்டது. அதனால் அவர்கள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்படித் தோன்றியது தான் தொழிலாளர்களின் தினமாகிய மே 01ஆம் திகதி ஆகும். திருஅவையும் தன்னுடைய பங்கிற்கு சமூகப் போதனைகள் வழியாக (Social Teachings of the Church) தொழிலாளர்களின் நலன்மீது அக்கறை காட்டத் தொடங்கியது. அப்படி வந்தது தான் இந்த விழாவாகும். இதனைத் தொடங்கி வைத்துப் பேசும் போது திருத்தந்தை 12ம் பத்திநாதர் இவ்வாறு சொன்னார். "தொழிலாளர்களாகிய உங்களுக்கென ஒரு பாதுகாவலர் உண்டு, அவர் வேறு யாருமல்ல, புனித யோசப்பே. அவரிடத்தில் நீங்கள் பரிந்து பேசினால் உங்கள் மன்றாட்டு கேட்கப்படும்". திருவிவிலியத்தில் இருந்து புனித யோசப்பைக் குறித்து நாம் அறிந்து கொள்ளக்கூடிய செய்திகள் மிகவும்



சொற்பமாகும். அவர் நேர்மையாளர் (மத்1:19) அவர் தன்னுடைய குடும்பத்தை தச்சு வேலை செய்துதான் காப்பாற்றி வந்தார். (மத்13:55) என்று அவரைக் குறித்துப் படிக்கின்றோம். அதைவிட திருவிவிலியத்தில் நாம் வாசிப்பதற்கு வேறு ஒன்றுமில்லை. இருந்தாலும் தாவீதின் வழிமரபில் பிறந்த புனித யோசப்பு வேலை செய்வதை அதிலும் குறிப்பாகத் தச்சு வேலை செய்வதை இழிவாகப் பார்க்காமல் செய்தார் என்பது தான் நமது சிந்தனைக்கு உரியதாக இருக்கின்றது. ஆகவே அவருடைய வாழ்வும் நாம் கொண்டாடும் தொழிலாளர் தினமும் நமக்கு என்ன செய்தியைத் தருகின்றது என்று சிந்தித்துப் பார்ப்போம்.

**இவற்றில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் :–**

தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசப்பின் விழாவை ஒவ்வொரு வருடமும் கொண்டாடும் நமக்கு இவ்விழா உணர்த்தும் செய்தி என்ன என்று சிந்திப்போம்.

**1.எந்த உழைப்பும் இழிவானது அல்ல :–**

இன்றைக்கு மனிதர்களிடம் இருக்கும் மிகவும் தவறான கருத்துகளில் ஒன்று உடல் உழைப்பு என்பது மிகவும் இழிவானது. உழைக்காமல் எல்லோர் மீதும் ஆதிக்கம் செலுத்துவதுதான் உயர்ந்தது என்பதாகும். இத்தகைய எண்ணத்தை நம்முடைய வாழ்வில் இருந்து அகற்ற வேண்டும் தொடக்கநூலில் ஆண்டவராகிய கடவுள் ஆறு நாட்கள் வேலை செய்து விட்டு ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். என்று படிக்கின்றோம். (தொ.நூ 2:2) அப்படியானால் கடவுளே ஓர் உழைப்பாளி, தொழிலாளி என்று நாம் புரிந்து கொள்ளலாம். தமதிருத்துவத்தில் இரண்டாம் ஆளாகிய இயேசுக் கிறிஸ்து மக்களால் "தச்சருடைய மகன்" என அழைக்கப்படுகின்றார். (மத்13:55) இயேசுவும் தன்னுடைய வளர்ப்புத் தந்தை யோசேப்பு செய்த தச்சுத் தொழிலையே செய்திருப்பார் என இங்கே நாம் புரிந்து கொள்ள வேண்டும். புறவினத்தாரின் திருத்தூதர் என அன்போடு அழைக்கப்படும் புனித பவுல் "நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும் மனிதருக்காக அல்ல ஆண்டவருக்காகவே செய்கின்றீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள் அதற்கு கைமாறாக ஆண்டவர் உங்களுக்கு உரிமைப்பேறு அருள்வார்" என்பார். (கொலோ 3:23-24) இங்கே பவுல் உழைப்பை உளமாரச் செய்ய வேண்டும் என்று சொல்லி உழைப்பை உயர்வாகப் பேசுகின்றார்.

ஆகவே நாம் செய்வது எந்த வேலையாக இருந்தாலும் அது சரித்திரம் எழுதுவதிலிருந்து சாக்கடை அள்ளுவது வரை உழைப்பை உயர்வாகப் பார்க்கக்கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் உழைப்பின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு பாராட்டுவதை நம்முடைய வாழ்வில் இருந்து தவிர்க்க வேண்டும்.

**2. உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டும் :–**

நற்செய்தியில் ஆண்டவர் இயேசு "வேலையாள் தம் உணவுக்கு உரிமை உடையவரே" (மத்10:10). உழைக்கின்ற ஒவ்வொருவரும் அதற்கேற்ற ஊதியம் பெறவேண்டும் என்பது தான் இயேசுவின் ஆழமான போதனையாக இருக்கின்றது. ஆனால் இன்றைக்கு நிறைய இடங்களில் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை உதாரணமாக இன்று மலையக மக்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை என்று முதலாளி சம்மேளத்துடன் போராடிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். என்றாலும் முதலாளி சம்மேளனம் கொடுப்பதாகத் தெரியவில்லை என்பது தான் நிதர்சனம் என்றாலும் அவர்கள் சோர்ந்து போகாமல் தங்களுடைய அடிப்படை சம்பளத்திற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். எது எப்படியோ யாராக இருந்தாலும் உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும். இதற்கு பொறுப்பானவர்கள் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு தொழிலாளர் தினத்திலாவது உணர்ந்து செயல்பட வேண்டும். இத்துடன் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசப்பின் விழாவை கொண்டாடும் நாம் அவரிடம் காணப்பட்ட நற்பண்புகளை நமதாக்குவோம். உழைப்பை உயர்வாகப் பார்ப்போம். எம் சமூகத்தில் எம்மோடு வாழுகின்றவர்கள் எப்படியான வேலைகளைச் செய்தாலும் அவர்களை ஏற்று மதிப்போம் ஏனென்றால் அனைவரும் உழைப்பாளர்கள் உழைப்பால் உயர்வு பெறுவோம். இறைவனின் மீட்புத்திட்டத்தில் பங்கெடுப்போம்.

அலோசியஸ் நோயல் டானியல்
உவர்மலை

## புனிதர்களின் பாதையில்....




“நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறு பிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்”(மத் 18:3-4)

பிரான்ஸ் நாட்டில் உள்ள நெவர்ஸ் என்னும் இடத்தில், 1844 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் நாள் பெர்னதெத் பிறந்தார். இவரது குடும்பம் வறிய குடும்பம் என்பதால் தன்னுடைய நண்பர்களோடு அருகிலிருந்த மசபெல் குகைக்கு ஆடு மேய்க்கச் செல்வார்.

1858 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் நாள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது வானிலிருந்து ஒரு பெண் தோன்றினார். அவர் வெள்ளை நிறத்தில் ஆடை அணிந்திருந்தார் இடையில் ஊதா நிறக் கச்சை அணிந்திருந்தார், கையில் செபமாலை வைத்திருந்தார். இக்காட்சி பெர்னதெத்துக்கு மட்டுமே தெரிந்தது. அவருடைய நண்பர்களுக்குத் தெரியவில்லை. இதை அவர் தன்னுடைய வீட்டிலும் அக்கம் பக்கத்திலும் சொன்னபோது யாருமே அதை நம்பவில்லை. தொடர்ந்து பெர்னதெத் மசபெல் குகைக்குச் சென்று ஆடு மேய்க்கும்போது வானத்திலிருந்து தோன்றிய பெண்மணி தன்னை நாமே அமல உற்பவம் என்றும், பாவ மன்னிப்புப் பெற மனமாறவேண்டும் என்றும் செபமாலை சொல்லவேண்டும் என்றும் அவரிடத்தில் எடுத்துச் சொன்னார். அதையும் பெர்னதெத் அங்கிருந்த பங்குத்தந்தையிடமும் அதிகாரிகளிடமும் எடுத்துச் சொன்னபோது அவர்கள் அதனை ஆய்வுக்கு உட்படுத்திய பின்னே நம்பமுடியும் என்று சொன்னார்கள். அதற்குள் மரியன்னை பெர்னதெத்துக்கு காட்சி கொடுத்த செய்தி மக்களுக்குத் தெரியவர பெருந்திரளான மக்கள் அங்கு வந்தனர்.

இதற்கிடையில் 1868 ஆம் ஆண்டு பெர்னதெத் நெவர்ஸ் நகரில் இருந்த துறவற சபையில் துறவியாகச் சேர்ந்தார். அங்கு அவர் ஜெபத்திலும் தவத்திலும் தம்மை முழுமையாய் ஈடுபடுத்திக் கொண்டதுடன் தாழ்ச்சியுடனும் வாழ்ந்தார். அவர் ஆஸ்மா நோய்க்கு உள்ளாகி இருந்ததால் உடலளவில் பெரிதும் கஷ்டப்பட்டார். 1879 ஆம் ஆண்டு அவருடைய நோய் முற்றிப்போனதால் நோயிலிருந்து மீளமுடியாமல் அப்படியே இறையடி சேர்ந்தார். 1933 டிசம்பர் 8ஆம் திகதி அமல உற்பவ அன்னை திருவிழா அன்று திருத்தந்தை 11 ஆம் பயஸ் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். புனித பெர்னதெத் சூபிரூசின் அழியாத உடல் அவர் வாழ்ந்த நெவர்ஸ் நகர மடத்தின் சிற்றாலயத்தில் இன்று வரையும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## புனித பெர்னதெத்



---

## வேதத்தீவு பெருவிழா



மூதூர் புனித அந்தோணியார் ஆலய பங்கைச் சேர்ந்த ஒரு பகுதி வேதத்தீவு. இங்கு புனித ஜோசப்வாஸ் அடிகளார் வந்து தங்கி நின்று சுற்றுவட்டாரங்களில் இறைபணியாற்றியுள்ளார். இந்த வரலாற்று சிறப்பு மிக்க இடத்தில் நம் புனிதருக்கு அழகிய ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தின் திருவிழாவை ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி கொடியேற்றி ஆரம்பித்து 13 ஆம் திகதி நமது மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் நிறைவேற்றப்பட்ட கூட்டுத்திருப்பலியுடன் நிறைவு பெற்றது. இந்த விழாவில் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளிலிருந்தும் இறைமக்கள் வருகை தந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

படகு மூலம் பயணம் செய்து இந்தத் திருத்தலத்தை வந்தடைந்து வேதத்தீவை நிரப்பியிருந்த பக்தர்கள் கூட்டம் காலநிலை மாற்றத்தாலோ வேறெந்த இடையூறுகளாலோ பாதிக்கப்படாமல் அமைதியாகவும் பக்தியாகவும் பங்கெடுத்தது புனிதரின் சிறப்பான புதுமையாகக் கருதப்படுகின்றது.



## மூதூர் புனித அந்தோணியார் ஆலய பெருவிழா

மூதூர் பங்குத் திருவிழா சென்ற யூன் மாதம் 16 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த இந்த விழா இறைவேண்டல் ஆண்டின் கருத்துக்களுடன் கொண்டாடப்பட்டு 15 ஆம் திகதி புனித அந்தோணியாரின் திருச்சுரூபம் சுற்றுப்பவனியுடன் தொடர்ந்து 16 ஆம் திகதி கூட்டுத்திருப்பலியுடன் நிறைவேறியது. இந்த திருவிழாக் காலங்களில் வெளியூர்களில் வசிக்கும் அனைத்து மூதூர் மக்களும், கிளைப்பங்குகள் மற்றும் அயல் பங்குகளிலிருந்து ஒன்றிணைந்து வந்திருந்தமை மிகவும் சிறப்பான தருணமாக அமைந்திருந்தது.

**தகவல் : பங்குமக்கள்**

---

## சிந்திக்க....

1. திறமைகள், ஆற்றல்கள், அனுபவங்கள், உறவுகள், உணர்வுகள் இவற்றைப் பேணு!
2. உன் வாழ்க்கை உன் கையில் தான் - எனவே துணிந்து செயல்படு!
3. உன்னால் செய்ய முடிந்தவற்றை நீயே செய்ய முயற்சி எடு!
4. உன் கடமைகளையும் பொறுப்புக்களையும் திட்டமிட்டுச் செயல்படுத்து!
5. உன்னிடமுள்ள ஆர்வங்களைப் புதைக்காதே – மாறாக விதைத்துவிடு!
6. தோல்விகளைக் கண்டு முடங்கி விடாதே! தொடர்ந்து முயற்சி செய்!
7. உன்னிடமுள்ள தனித்துவத்தைக் கண்டுகொள்!
8. இன்று என்ன செய்ய வேண்டும் என ஒவ்வொரு நாளும் திட்டமிட்டுச் செயல்படு!
9. உன் வாழ்க்கையின் எதார்த்தங்களை ஏற்றுக்கொள்!
10. உன் வாழ்வில் முயற்சி, பயிற்சி, தொடர்ச்சியை மேற்கொள். அதுவே உன் வளர்ச்சி! எழுச்சி! மகிழ்ச்சி!



## புனித யோவான் நற்செய்தி 17 – 20 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=

**கேள்வி பதில்**

1. நிலைவாழ்வு எது என இயேசுக் கிறிஸ்து கூறுகின்றார்?

விடை:..........................................................................................

..........................................................................................

2. யூதர்கள் இயேசுவை தமது சட்டத்தின்படி சாக வேண்டும் எனக் கூறியது ஏன்?

விடை:..........................................................................................

3. இயேசுவைக் குறித்து எழுதப்பட்ட குற்ற அறிக்கை என்ன?

விடை:..........................................................................................

4. இயேசுவின் உடலை எடுத்துச் செல்ல பிலாத்துவிடம் அனுமதி கேட்டவர் யார்?

விடை:..........................................................................................

5. தோமா இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்பும் விதமாக இயேசு கூறியது என்ன?

விடை:..........................................................................................

..........................................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என கயபா யூதர்களுக்கு ஆலோசனை வழங்கினான். (   )

7. ரபூனி என்றால் போதகரே என்று பொருள்படும். (   )

8.பேதுரு தலைமைக் குருவின் பணியாளர் மால்குவின் இடக்காதை வெட்டினான் (   )

9. பேதுரு இயேசுவை மறுதலிக்கவில்லை. (   )

10. இயேசுவிற்குப் பதிலாக பரபாவை விடுதலை செய்யுமாறு கேட்டனர். (   )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. உம் ________________ நான் அவர்களுக்கு அறிவித்தேன். நான் உலகைச் ________________ இல்லாதது போல், அவர்களும் ________________ சார்ந்தவர்கள் அல்ல.

12. நான் உலகறிய ________________ பேசினேன். யூதர் அனைவரும் கூடிவரும் ________________ கூடங்களிலும் ________________ தான் எப்போதும் கற்பித்து வந்தேன்.

13. நீ என்னைக் ________________ நம்பினாய் ________________ நம்புவோர் பேறுபெற்றோர் என்றார்.

14. என் ________________ தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது ________________ போட்டார்கள்.

15. தந்தையே ________________ தோன்றும் முன்னே நீர் என் மீது ________________ கொண்டு எனக்கு மாட்சி அளித்தீர்.

பெயர் :..........................................................................................

முகவரி :..........................................................................................

பங்கு :..........................................................................................

*முடிவுத்திகதி 2024.08.02*

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 59 எசாயா 20 – 24 அதிகாரங்கள்

1. தென் நாட்டிலிருந்து இது வீசுவதுபோல் அச்சம் தரும் நாடான இங்கிருந்து அழிவு வருகின்றது.

விடை:..........................................................................................

2. இந்த நாட்டில் குடியிருப்போரே இவர்களுக்கு தண்ணீர் கொண்டு வாருங்கள். இவர்களை உணவுடன் சென்று சந்தியுங்கள்.

விடை:..........................................................................................

3. இவரைப் போல் மண்ணுலகம் தள்ளாடுகின்றது. இதைப் போல் அது இடம் பெயர்ந்து செல்கின்றது.

விடை:..........................................................................................

4. இவள் நாணமுறுவாள் இவன் வெட்கமடைவான்.

விடை:..........................................................................................

5. இதில் இது நிகழ்கிறது. இவைகள் தகர்க்கப்படுகின்றன.

விடை:..........................................................................................

6. இதை அடித்து இவைகளை வெட்டி இதை உண்டு இதைக் குடிக்கின்றீர்கள்.

விடை:..........................................................................................

7. அரண்மனைப் பொறுப்பாளனும் அதிகாரியுமாகிய இவரிடம் சென்று நீ சொல்ல வேண்டியது.

விடை:..........................................................................................

8. ஆண்டவர் எத்தனை ஆண்டுகளுக்குப் பின் இந்நகரைத் தேடி வருவார்.

விடை:..........................................................................................

9. அரணுக்கு வலுவூட்ட இதை இடித்தீர்கள்.

விடை:..........................................................................................

10. இவரின் மகளே உன் நிலத்தை உழுது பண்படுத்து; இனி இங்கு இது இராது.

விடை:..........................................................................................

11. நீ போய் உன் இடையிலிருந்து இந்த உடையைக் களைந்து விடு. உன் கால்களிலிருந்து இதைக் களைந்து விடு.

விடை:..........................................................................................

12. எகிப்தியருக்கு மானக்கேடு உண்டாகும் படி இவர்களை இது இன்றியும் வெறுங்காலோடும் இருப்பிடம் மூடப்படாமலும் இழுத்து வருவான்.

விடை:..........................................................................................

13. அசீரிய மன்னன் இவர். அனுப்பிய இவர் என்ற படைத்தளபதி.

விடை:..........................................................................................

14. கலக்கமடைந்து இவர் போல் ஆனேன் திகைப்புற்று இவர் போல் ஆனேன்.

விடை:..........................................................................................

15. இந்த ஆற்றின் பெருவெள்ளத்தில் விளைந்த இதுவும். இந்த நதியின் இதுவுமே உங்கள் வருமானம்.

விடை:..........................................................................................

பெயர் :..........................................................................................

முகவரி :..........................................................................................

தரம் :..........................................................................................

பங்கு :..........................................................................................

*முடிவுத்திகதி 2024.08.02*

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



படம் 01



படம் 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 ற்கு மாத்திரம் நிறம்தீட்டி படம் 02 இல் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - 700/-    2 ஆம் பரிசு - 500/-    3 ஆம் பரிசு - 300/-

பெயர் :..........................................

முகவரி :..........................................

தரம் :..........................................

பங்கு :..........................................

முடிவுத்திகதி 2024.08.02

## திருமலைத்தீபம் பத்திரிகையில் இடம்பெற்ற போட்டிகளுக்கான முடிவுகள்

### சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
V. Timothy Bryden
இல. 35/14, டொக்யாட் வீதி
புனித மரியாள் பேராலயம்



2 ஆம் பரிசு 500/= ரூபா
யோ. டிவேஞ்சன்
இல. 676, அன்புவழிபுரம்
புனித சதாசகாய அன்னை ஆலயம்



3 ஆம் பரிசு 300/= ரூபா
ச. சஞ்ஞுனா
இல. 35, ஹெம்பேக்கர் வீதி, பாலையூற்று
லூர்து அன்னை திருத்தலம்

### புனித யோவான் நற்செய்தி அதிகாரங்கள் 09 – 12

1 ஆம் பரிசு 700/= ரூபா
தயாசீலி ஜோசப் பீற்றர்
35/14, டொக்யாட் வீதி
புனித மரியாள் பேராலயம்

2 ஆம் பரிசு 500/= ரூபா
S. நிவேதிகா
இல. 188/5, மாங்காயூற்று, கன்னியா
கிறிஸ்து அரசர் ஆலயம்

3 ஆம் பரிசு 300/= ரூபா
வி. வினோஜன்
புதுக்குடியிருப்பு, தம்பலகமம்
புனித பாத்திமா அன்னை ஆலயம்



### ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி ~ 57 எசாயா 10 ~ 14 அதிகாரங்கள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
க. துசாரா
பொற்கேணி, தம்பலகமம்
புனித பாத்திமா அன்னை ஆலயம்



2 ஆம் பரிசு 500/= ரூபா
R.M. யுவான் ஜெரமி
இல. 125/1, உட்துறைமுக வீதி, உவர்மலை
குழந்தை இயேசு ஆலயம்



3 ஆம் பரிசு 300/= ரூபா
R. அப்சரா நிவேதி
3 ஆம் வட்டாரம், நிலாவெளி
புனித சூசையப்பர் ஆலயம்

### விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவு ~ 44

1 ஆம் பரிசு 700/= ரூபா
N.P. பிரதீப்ஷன்
கணேஸ வித்தியாலயம்
தேற்றாத்தீவு

2 ஆம் பரிசு 500/= ரூபா
க. ஜோசப்பின் மேரி
சந்தை வீதி, மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்



3 ஆம் பரிசு 300/= ரூபா
றெமில்டன் றாகல்
இல. 51, அந்தோனியார் வீதி, நித்தியபுரி
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

மறைக்கல்வி மாணவர்களுக்கான மறைமாவட்ட ரீதியிலான திருவிவிலிய எழுத்துப் பரீட்சையானது 23.04.2024 அன்று புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது. இதில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.











## இரண்டாவது தேசிய அன்பிய பொதுக்கூட்டம்





2024ஆம் வருடத்திற்கான இரண்டாவது தேசிய அன்பிய பொதுக்கூட்டமானது திருகோணமலை மறைமாவட்டத்தில் உள்ள தீபம் நிலையத்தில் 2024.05. 8ஆம் 9ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதிலே இலங்கையில் உள்ள அனைத்து மறைமாவட்ட அன்பிய இயக்குனர்களும் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். பொது நிலையினருக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழுவின் தலைவராகிய மேதகு ஆண்டகை கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திருகோணமலை மறைமாவட்டத்தில் உள்ள பாலையூற்று, உவர்மலை, செல்வநாயகபுரம், அன்புவழிபுரம் ஆகிய பங்குகளின் அன்பியங்களை தேசிய உறுப்பினர்கள் பார்வையிட்டதுடன், அன்பியம் தொடர்பான சிறப்புரையும் ஆற்றப்பட்டது.

தகவல்
அன்பிய இயக்குனர்

## தேசிய அன்பியக் குழுவினரின் வருகை



கடந்த 08.05.2024 அன்று மாலை எமது குழந்தை இயேசு ஆலய அன்பியங்களை சந்திக்க தேசிய அன்பியக் குழுவினர் அதன் இயக்குனர் அருட்பணி. பிரிய ஜயமான்ன அவர்களின் தலைமையில் 4 அருட்தந்தையர்கள் 2 அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர்களும் வருகை தந்திருந்தனர்.

எமது பங்குத்தந்தை அருட்பணி. X.I ரஜீவா அவர்களுடன் பங்கு மக்களும் இணைந்து பூச்செண்டு கொடுத்து வரவேற்பு நடனத்துடன் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து எமது பங்கில் இரு இல்லங்களின் அன்பியங்களில் கலந்து கொண்டமை மகிழ்ச்சியான தருணமாக அமைந்தது.

**தகவல்: உவர்மலை பங்குமக்கள்**

## விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள் நினைவு



### அமரர் திருமதி மேரி ஹில்டா டி குரூஸ் (வேம்பார்)

**மண்ணில்: 29.05.1938** **விண்ணில்: 19.04.2024**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்."
யோவான் 11:25

**31 ஆம் நாள் நினைவுத் திருப்பலி 18.05.2024 அன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு புனித சதாசகாய அன்னை ஆலயம், அன்புவழிபுரம், திருகோணமலையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.**

அன்னையின் பிரிவால் துயருறும்
டி குரூஸ் குடும்பத்தினர்
இலக்கம் 36A, காந்தி நகர்
அன்புவழிபுரம்
திருகோணமலை